

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையில் 213 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள “நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்” மேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, இ. பெரியசாமி, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, அ. வெங்கடேசன், எம். பூமிநாதன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர்.ஆர்.செல்வராஜ், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில், 1,536 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில், 10 இலட்சத்து 93 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலான 867 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைத்தார்.





## முதலமைச்சர் 73–வது பிறந்த நாள் முதல் நிகழ்ச்சி: சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில்,

# 73 இணையர்களுக்கு திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்!

## கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் கழகப் பணியாற்றும் மகளிருக்கு 76 இருசக்கர வாகனங்களை வழங்கினார்!



**சென்னை,பிப்.23-**

**சென்னை கலைவாணர் அரங்கத்தில், சென்னை துறைமுகம் தொகுதியைச் சேர்ந்த 73 இணையர்களுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்திப் பேசினார். விழாவில் கழகப்பணியாற்றி வரும் 76 மகளிருக்கு இருசக்கர வாகனங்களையும் வழங்கி சிறப்பாகப் பணியாற்ற வாழ்த்தினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் 73-வது பிறந்தநாளையொட்டி, இன்று 73 இணையர்களுக்கு உங்களின் முன்னிலையில், திருமணத்தை நடத்தி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திருமணம் மட்டுமல்ல, கழகத்திற்காக உழைத்திருக்கின்ற 76 மகளிருக்கு இன்று இருசக்கர வாகனங்களையும் நம்முடைய அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் வழங்கியிருக்கிறார். அதற்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள்.

### தலைவர் பிறந்த நாள் முதல் நிகழ்ச்சி

மிக மிக முக்கியமான நிகழ்ச்சி. கழகத் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு, நடக்கின்ற முதல் நிகழ்ச்சி. நம் அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் தலைவரின் பிறந்தநாளைச் சிறப்பாக நடத்துவார். அதில் இன்று தொடக்கமே மிகச்சிறப்பான, மகிழ்ச்சியான திருமண நிகழ்ச்சியாக நடத்திக் காட்டியிருக்கிறார். அதற்கு அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு என் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் சேகர்பாபு அவர்களை அறநிலையத் துறை அமைச்சரா அல்லது அன்பு நிலையத் துறை அமைச்சரா என்று நான் கேட்பதுண்டு. அந்தச் சந்தேகம் அடிக்கடி வருவதுண்டு. அதையெல்லாம் மீண்டும் நிரூபிக்கின்ற வகையில், இன்று 73 இணையர்களுக்குச் சிறப்பான முறையில் இந்தத் திருமணத்தை நடத்தி வைத்துள்ளார். அரசியலாக இருக்கட்டும், ஆன்மிகமாக இருக்கட்டும் இரண்டிலுமே அண்ணன் சேகர்பாபு அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருபவர். அதனால்தான் தலைவர் அவர்கள் அவரை அடிக்கடி ‘சேகர்பாபு அல்ல, நீ செயல்பாபு’ என்று புகழ்ந்து பேசுவார்.

### 5,000 கோயில்கள் குடமுழுக்கு

இன்றைக்கு அவரின் தொகுதியில், மாவட்டத்தில் மட்டுமல்ல, அவரின் அறநிலையத் துறையில் ஏராளமான சாதனைகளைச் செய்து வருகிறார். இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் நம் அரசு சார்பாக 5,000 கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது. இது எந்த ஆட்சியும் செய்யாத சாதனை. கிட்டத்தட்ட 9,000 கோடி மதிப்பிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. துறை சார்பாக 3,000 திருமணங்களை அண்ணன் அவர்கள் நடத்தி வைத்துள்ளார். இப்படி அவரின் பல்வேறு சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

அரசியல் பணியாக இருக்கட்டும், கட்சிப் பணியாக இருக்கட்டும், மக்கள் பணியாக இருக்கட்டும், எப்பொழுதுமே மக்களோடு மக்களாகத் தொடர்பில், இருக்கக்கூடிய ஒரு மாவட்டச் செயலாளர் அண்ணன் சேகர்பாபு அவர்கள். கொரோனா காலமாக இருந்தாலும் சரி, மழைவெள்ளம் போன்ற பேரிடர் காலமாக இருந்தாலும் சரி, களத்தில் இறங்கி என்றைக்கும் மக்களுடன் நின்று மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்து கொடுப்பவர் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

ஏழை எளிய மக்களுக்கு, மாணவர்களுக்கு, மாணவிகளுக்குப் பயிற்சி வகுப்புகள், கல்வி மட்டுமல்லாமல் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற திறன் பயிற்சி என இப்படிப் பல்வேறு விஷயங்களை அவர் செய்து வருகிறார். இன்றைக்குத் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு மட்டுமல்ல, தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ் என இப்படி எல்லாப் பண்டிகைகளையும் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், அதை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யக்கூடியவர் அன்பு அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

### புதுமண இணையர்கள்

அதன் தொடர்ச்சியாக இன்று கழகத்திற்காக உழைத்த 76 மகளிருக்கு இருசக்கர வாகனங்களையும் கொடுத்திருக்கிறார். இங்கே இருக்கக்கூடிய புதுமண இணையர்கள், தம்பதிகள், உங்களின் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் முகத்தில் எல்லாம் இன்று அவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறது. நான் கலைவாணர் அரங்கத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், இப்படிப்பட்ட ஒரு மகிழ்ச்சியான ஒரு கூட்டத்தை நான் இதுவரை கலைவாணர் அரங்கத்தில் பார்த்ததே இல்லை.

உங்களில் நிறைய பேர் ‘90-ஸ் கிட்ஸ்’ இருப்பீர்கள். கீழே மட்டுமல்ல, மேடையிலும் இருப்பார்கள் என்று நிச்சயம் நம்புகிறேன். அவர்கள் அமர்ந்தவுடன், என் பக்கத்தில் இருக்கின்ற இரண்டு தம்பதிகளுக்குத் தாலி எடுத்துக் கொடுக்கும்போது கேட்டேன். முகத்தில் கூடுதல் மகிழ்ச்சி இருந்தது. எனக்கு சந்தேகம் வந்தது. கேட்டேன் “என்ன தம்பி, காதல் திருமணமா அல்லது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமா?” என்று கேட்டவுடன் ஒரு தம்பி சொன்னார், “அண்ணா, காதல் திருமணம்தான்” என்றார். “நல்ல புரிதலா? எத்தனை வருட காதல்?” என்று கேட்டேன். “இரண்டரை வருடம் கஷ்டப்பட்டிருக்கிறேன் அண்ணா” என்று சொன்னார்.

### தடைகளை எல்லாம் கடந்து

அதேபோன்று இன்னொரு தம்பதியிடமும் கேட்டேன். “என்னம்மா, காதல் திருமணமா அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணமா?” என்று கேட்டதற்கு, “இல்லை அண்ணே, காதல் திருமணம் இப்போது நிச்சயிக்கப்பட்ட திருமணமாகிவிட்டது” என்று சொன்னார்கள். ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரை, இந்த மேடையில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்குக் காதல் திருமணம்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

கிட்டத்தட்ட 90 சதவிகிதம் இல்லை, 100 சதவிகிதம் இங்கு காதல் திருமணம்தான். கூடுதல் மகிழ்ச்சி, ஏனென்றால் எனக்கும் காதல் திருமணம்தான். ஆனால், காதல் திருமணம்தான் இருப்பதிலேயே மிகவும் கஷ்டமான திருமணம். முதலில் அந்த காதலன் காதலியிடமோ அல்லது காதலி காதலனிடமோ காதலைச் சொல்ல வேண்டும். அதற்கு ஒரு பெரிய தைரியம் வேண்டும்.

அதன்பிறகு ஒருவரை ஒருவர் ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும், ஈர்க்க வேண்டும். அவர்களின் மனதிற்குப் பிடித்தது போல நடந்துகொள்ள வேண்டும். அதன் பிறகு கஷ்டப்பட்டுச் சம்மதத்தை வாங்கினாலும், பிறகு பெண்ணின் அப்பா, அம்மாவோ அல்லது பையனின் அப்பா, அம்மாவோ - அவர்களுடைய சம்மதத்தைப் பெற வேண்டும். அதற்கு நீண்ட காலம் ஆகும். அதன் பிறகு அவர்கள் சம்மதித்துவிட்டாலும், குடும்பத்தில் இருந்து புதிதாக ஒருவர் வருவார். பையனுடைய பெரியப்பா, பெண்ணுடைய மாமா, பெண்ணுடைய முறைப்பையன் என அவர்களை எல்லாம் சமாளிக்க வேண்டும். அப்படி இவ்வளவு பெரிய தடைகளை எல்லாம் கடந்து, இன்று இத்தனை இணையர்கள் திருமணத்தை, நம் சேகர்பாபு அண்ணன் அவர்கள் நடத்தி வைத்துள்ளார்.

நல்ல புரிதலோடு இன்று எப்படி மகிழ்ச்சியோடு இருக்கிறீர்களோ, இணையர்களாக எப்படி இணைந்துள்ளீர்களோ, நீங்கள் மட்டுமல்ல, இங்கு வந்துள்ள உங்களின் உற்றார் உறவினர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் இன்று மகிழ்ச்சியாக அமர்ந்துள்ளார்கள். இதேபோல எப்பொழுதுமே இதே மகிழ்ச்சியோடு இந்த இணையர்கள் இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உங்களுக்குப் பெரிய அறிவுரைகள் எல்லாம் நான் சொல்லப்போவதில்லை. ஏற்கனவே மூன்று வருடங்கள் கஷ்டப்பட்டிருப்பீர்கள். அந்த அனுபவம் எல்லாம் உங்களுக்கு இருக்கும்.

### அழகான தமிழ்ப் பெயர்

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து - எதற்கு விட்டுக்கொடுக்க வேண்டுமோ அதற்கு மட்டும் விட்டுக்கொடுத்து, எதற்கு உரிமைகளை விட்டுக்கொடுக்கக் கூடாதோ அதற்குத் தைரியமாகச் சண்டை போட்டு, அந்த உரிமையை விட்டுக்கொடுக்காமல் தன்மானத்தோடும் சுயமரியாதையோடும் ஒவ்வொருவரும் உங்களின் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். வந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் ஒரேயொரு வேண்டுகோள்தான். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கழகத் தலைவர் அவர்கள் எந்தத் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் ஒரேயொரு வேண்டுகோளைத்தான் வைப்பார்கள். நானும் அதே வேண்டுகோளைத்தான் வைக்கிறேன்.

உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அதற்கு அழகான ஒரு தமிழ்ப் பெயரை நீங்கள் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, அண்ணன் சேகர்பாபு அவர்களின் இந்த மக்கள் பணி, கழகப் பணி மேன்மேலும் தொடர வேண்டும் என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி எத்திராசன், தேவ ஜவஹர், ஜி.எம்.தேவன், ஆசாத், மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர் சந்துரு, பரிதி இளம்சுருதி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப்.முரளி, நாகராஜ், வேலு, சுதாகரன், ராஜசேகர், முரளி, கூ.பி. ஜெயின், வாசு, தமிழ்வேந்தன், சாமிக் கண்ணு, நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால், மண்டலக் குழுத் தலைவர்கள் சரிதா மகேஷ் குமார், பி.கே.மூர்த்தி, நேதாஜி கணேசன், சாந்தகுமாரி, நரேந்திரன், இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் ஜெகதீஷ், பாலமுருகன், வினோத், ஜி.ஜே.பிரபு, தனசேகரன், சங்கர் நானா, பகுதி அமைப்பாளர் மோகன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.